2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

சார் பதிவாளர் அலுவலகம்

***223332—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூரில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி தொகுதி, மானூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவழும் நிலவாம் தங்க ரதம், தாரகை பதித்த மணி மகுடம், (மேசையைத் தட்டும் ஒலி) குயில்கள் பாடும் கலைக்கூடம், கொண்டது அம்மாவின் அரசாங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) "இல்லை" என்ற சொல் இனி தமிழகத்தில் இல்லாமல் இருக்கவேண்டுமென்பதற்காக விலையில்லா பொருட்களை அள்ளித் தருகிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானூரில் சார் பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தந்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களை மறுபரிசீலனை செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானூர் கிராமம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி—2 இணைச் சார் பதிவாளர் அலுவலக ஆட்சி வரம்பிற்கு உட்பட்டதாகும். மானூர் கிராமத்தையொட்டி எட்டான்குளம், களக்குடி, நாஞ்சான்குளம், மதவக்குறிச்சி, மாவடி, மானூர், கானாரப்பட்டி, தென்குளம், பள்ளிக்கோட்டை, அழகிய பாண்டிபுரம், உக்கரன்கோட்டை ஆகிய கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் கடந்த 2009—2010 ஆம் ஆண்டில் 1,433 ஆவணங்களும், 2010—2011 ஆம் ஆண்டில் 1,636 ஆவணங்களும், 2011—2012 ஆம் ஆண்டில் 2,818 ஆவணங்களும், 2012—2013 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் 725 ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் ஒரு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஆண்டுக்கு சராசரியாக குறைந்தபட்சம் 5,000 ஆவணங்கள் முதல் அதிகபட்சம் 10,000 ஆவணங்கள் வரை ஆவணப் பதிவு மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், மேற்காணும் கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் நடைபெறும் ஆவணப் பதிவு ஆண்டு சராசரியைவிட மிகக் குறைவே ஆகும். புதிய சார் பதிவாளர் அலுவலகம் துவக்கப்படுவதால் மேற்கண்ட கிராமங்கள் தற்போது இணைக்கப்பட்டுள்ள சார் பதிவாளர் அலுவலகங்களின் ஆவணப் பதிவில் வீழ்ச்சி ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இந்நிலையில் மேற்காணும் 11 கிராமங்களை உள்ளடக்கிய மானூரில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுமாயின் எதிர்நோக்கப்படும் ஆண்டு சராசரி ஆவணப் பதிவு சுமார் 1,500 மட்டுமே ஆகும். இது சராசரியைவிட மிகவும் குறைவு. இவ்வாறு மிகக் குறைவான ஆவணப் பதிவு நடைபெறும் இடங்களில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுவதால் அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏற்படுவதோடு வருவாய் இழப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படவேண்டுமெனில் ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் தொடர் செலவினமாகவும், ரூ.13 இலட்சம் தொடராச் செலவினமாகவும் அரசு செலவிட வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டதில் திருநெல்வேலி தொகுதி மானூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்த அவசியம் எழவில்லை. இருப்பினும் இனி வருங்காலங்களில் மானூர் பகுதியை உள்ளடக்கிய கிராமங்களில் ஆவணப் பதிவில் முன்னேற்றம் ஏற்படும் நேர்வில், அதாவது குறைந்தபட்சம் 5,000 ஆவணங்கள்

2013 ஏப்ரல் 8]

வருகின்றபட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "கனிவுடன் பரிசீலிக்கப்படும்" என்ற நல்ல தகவலைத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

174—

போக்குவரத்துப் பணிமனை

***24848—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டம், அனந்தபுரம் பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டத்தின் சார்பில் விக்கிரவாண்டி தொகுதி, அனந்தபுரம் பகுதியில் புதிய பணிமனை அமைப்பதற்காக செஞ்சி